செ.வெ.எண்.27 நாள்.10.04.2017.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 54 பயனாளிகளுக்கு ரூ.12.90 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளைமாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.04.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டம், இந்திராகாந்தி தேசீய முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ஆலங்குளம் வட்டத்தைச் சார்ந்த 20 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 7 பயனாளிகளுக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 4 பயனாளிகளுக்கு ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், நாங்குநேரி வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கனை ஆணையினையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலிந்தோர் உதவித் தொகையாக 7 பயனாளிகளுக்கு தலா ரூ.20 ஆயிரத்திற்கான காசோலைகளையும், திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.13,500/-க்கான காசோலையினையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு நாட்டுக் கோழிப்பண்ணை அமைப்பதற்கு ரூ.33,850/-த்திற்கான காசோலையினையும், சங்கரன்கோவில் வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும், மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மின்சாரம் தாக்கி இறந்த நாங்குநேரி வட்டம், இட்டமொழி கிராமத்தைச் சார்ந்த திருமதி.சண்முகக்கனி என்பவரின் வாரிசுக்கு ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினையும், திருவேங்கடம் வட்டம், காரிசாத்தான் கிராமத்தைச் சார்ந்த திருமதி.பரமேஸ்வரி என்பவரின் வாரிசுக்கு ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்களையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 2 பயனாளிகளுக்கு தீருதவித் தொகையாக தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலைகளையும் ஒரு பயனாளிக்கு ரூ.1.80 இலட்சத்திற்கான காசோலையினையும்ஆக மொத்தம் 54 பயனாளிகளுக்கு ரூ.12,90,828/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளைமாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.எஸ். நிர்மலா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.பாலமுருகன், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் (ஆலங்குளம்) திரு.மு.சேக்அப்துல்காதர், (சிவகிரி) திருமதி.கிருஷ்ணவேணி, (சங்கரன்கோவில்) திரு.ஆர்.முருகன் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.